கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.
முன்னிலை – **திரு.எம்.விக்னேஷ் பிரபு, எம்.எல்.,**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள், 6ஆம் நாள் வெள்ளிக்கிழமை
E.A.No.1/2025 in E.P.No.38/2025 in O.S.No.250/2021

பாண்டியன் . . . மனுதாரர்/JD

/எதிராக/

பாலகிருஷ்ணன் . . . எதிர்மனுதாரர்/DH

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் 28.01.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.நாராயணன் அவர்கள் முன்னிலையாகியும் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எம்.எஸ்.சங்கரபாண்டியன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 106–ன் கீழ் மனுதாரருக்கு எதிராக பிறப்பித்த ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்து நிறைவேற்று மனுவினை மேல்நடத்த வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்**

மனுதாரர் இம்மனுவில் மனுதாரர் மேற்படி நிறைவேற்று மனுவில் தீர்ப்பு கடனாளி என்றும், மேற்படி நிறைவேற்று மனுவில் மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக 03.06.2025 அன்று வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், அன்றைய தினம் மனுதாரர் நீதிமன்ற



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.06 12:36:41 +0530

வளாகத்திற்குள் காலை 10.30 மணியளவில் வந்துவிட்டதாகவும், எந்த நீதிமன்றம் என்று தனக்குத் தெரியாததால் நீதிமன்றத்தில் மனுதாரர் மேற்படி தேதியன்று ஆஜராகாமல் போனதால் 03.06.2025 அன்று மனுதாரருக்கு எதிராக கனம் நீதிமன்றத்தில் ஒருதலைப்பட்சமான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், வாய்தா தினத்தன்று மனுதாரா நீதிமன்றத்தில் ஆஜராகாதது வேண்டும் என்றே ஏற்பட்டதல்ல என்றும், மனு தாக்கல்.

3. **எதிர்மனுதாரர் தாக்கல் செய்யும் ஆட்சேபணையின் சுருக்கம்**

மனுதாரரின் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்றும், அதனை மனுதாரர் நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணமும் ஏற்புடையதல்ல என்றும், மனுதாரரின் மனுவில் தான் அன்றைய தினம் நீதிமன்றத்துக்கு வந்துவிட்டதாகவும், ஆனால் எந்த நீதிமன்றம் என்று தனக்கு தெரியாததால் தன்னால் ஆஜராக முடியவில்லை என்றும், மனுவில் கண்டிருப்பது ஏற்புடையதல்ல என்றும், ஏனென்றால் மனுதாரர் நீதிமன்றத்தில் அவர் பெயரில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் ஆஜராகி சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அவ்வாறு இருக்கையில் எந்த நீதிமன்றம் என்று தனக்கு தெரியவில்லை என்று அவர் கூறியிருப்பது நம்பும்படியாகவும் ஏற்புடையதாகவும் இல்லை என்றும், மனுதாரருக்கு எதிராக 03.06.2025 அன்றே உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவிட்டது என்றும், ஆனால் 12.11.2025 அன்று தான்மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், இதிலிருந்தே மனுதாரரின் நோக்கம் நீதிமன்றத்திற்கு நன்கு விளங்கும் என்றும், நிறைவேற்று மனுவில் கண்டுள்ள தொகையினை

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.06 12:36:51 +0530

செலுத்தக்கோரி இவ்எதிர்மனுதாரர் கனம் கோர்ட்டில் தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரரின் நோக்கமே நிறைவேற்று மனுவில் கண்டுள்ள தொகையினை செலுத்தாமல் காலம் கடத்த வேண்டுமென்பதே என்றும், அதனால் தான் மனுதாரர் பரம் இம்மனு தாக்கல். எனவே எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டி எதிர்மனுதாரர் பரம் எதிருரை தாக்கல்.

4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சினை என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இருதரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரர் அசல் நிறைவேற்று மனுவில் தீர்ப்பாணை பெற்றவர். எதிர்மனுதாரர் தீர்ப்பு கடனாளி ஆவார். மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக எதிர்மனுதாரர் தீர்ப்பினை நிறைவேற்றாததால் அவரை கைது செய்து சிவில் நீதிமன்றத்தில் அடைக்க வேண்டி நிறைவேற்று மனு தாக்கல் செய்தார். 03.06.2025 தேதியன்று எதிர்மனுதாரர்/தீர்ப்பு கடனாளி இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததால் அவருக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த உத்தரவினை ரத்து செய்ய வேண்டி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் இம்மனுவை அவருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு ஒரு மாதத்திற்கு முன்னதாகவே இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாலும், மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணம் ஏற்புடையதாக உள்ளதாலும், மனுதாரருக்கு எதிராக 03.06.2025 தேதியன்று பிறப்பிக்கப்பட்ட



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.06 12:36:57 +0530

ஒருதலைப்பட்ச உத்தரவு ரத்து செய்ய வேண்டி தாக்கல் செய்துள்ள இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்படுகிறது.

இறுதியாக மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்த பின்னர் 2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6–ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.06 12:37:04 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் : இல்லை**

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் : இல்லை**

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.06 12:37:10 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.